**சுருக்கம்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை – கிறித்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் – வாரியத்தை செயல்படுத்திடவும் மற்றும் உறுப்பினர் சேர்க்கை செய்து நலத்திட்ட உதவிகள் வழங்கிடவும் ரூ.75,00,000/– நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்**
**சிறுபான்மையினர் நல(சிநஆபி1)த் துறை**

அரசாணை (நிலை) எண்.84 நாள் 27.11.2023

திருவள்ளுவர் ஆண்டு 2054

சோபகிருது, கார்த்திகை–11

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.39, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 25.05.2022.
2. அரசாணை (நிலை) எண்.9, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 18.01.2023.
3. சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநரின் கடித எண்.ஆ1/2861/2021, நாள் 03.10.2022 மற்றும் 26.07.2023.

*********

**ஆணை:–**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், கிறித்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைப்பதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கியும், அவ்வாரியத்திற்கு சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் அவர்களை உறுப்பினர் – செயலராக நியமனம் செய்தும் ஆணைகள் வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், இந்நல வாரியத்தில் பதிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கான வழிமுறைகள், உறுப்பினர்கள் பதிவு செய்வது, நலத்திட்ட உதவிகளுக்காக விண்ணப்பப் படிவங்கள், விண்ணப்பிக்கும் முறை குறித்த வழிமுறைகள் மற்றும் படிவங்கள் தொகுப்பு வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், இந்நல வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்வதற்கான உறுப்பினர் சேர்க்கை படிவங்கள், அடையாள அட்டைகள் மற்றும் வழங்கப்பட வேண்டிய பல்வேறு நலத்திட்ட உதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் ஆகியவற்றை அச்சடித்து அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டும் மற்றும் அவ்வாரியத்தில் பதிவு பெறவுள்ள உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதற்கு இந்நலவாரியத்திற்கு முதற்கட்டமாக ரூ.1,50,00,000/- நிதி ஒதுக்கீடு செய்யுமாறு சிறுபான்மையினர் நல இயக்குநர் கோரியுள்ளார்.

4. சிறுபான்மையினர் நல இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, கிறித்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர் நல வாரியத்திற்கு, வாரியத்தை செயல்படுத்திடவும் மற்றும் உறுப்பினர் சேர்க்கை செய்து நலத்திட்ட உதவிகள் வழங்கிடவும், சிறுபான்மையினர் நல இயக்குநரால் கோரப்பட்ட தொகையான ரூ. 1,50,00,000/-இல் 50 விழுக்காட்டுத் தொகையான ரூ.75,00,000/-ஐ (ரூபாய் எழுபத்தைந்து இலட்சம் மட்டும்) கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது:-

- பயனாளிகளின் முழு விவரங்கள் அடங்கிய பயனீட்டு சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே மீதத் தொகை கோரப்பட வேண்டும்;
- இவ்வாரியத்தின் மூலம் நலத்திட்ட உதவிகளை பெறும் பயனாளிகள் அரசின் மற்ற பொதுநலத் திட்டங்களிலும் இவ்வுதவி பெறப்படவில்லை என்பதனை அப்பயனாளர்களின் ஆதார் எண் இணைப்பதன் மூலம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

5. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் புதிய கணக்குத் தலைப்பின்கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்:-

"2225 - ஆதிதிராவிடர் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 80 - பொது - 800 - ஏனைய செலவு மாநிலச்செலவினங்கள் - AF கிறித்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் - 309 - உதவித்தொகை - 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை.

(ததொகு: 2225-80-800-AF-30903)"

6. மேலே பத்தி 5-இல் காணும் புதிய கணக்குத் தலைப்பிற்கு சிறுபான்மையினர் நல இயக்குநர் அவர்கள் மதிப்பீடு கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

7. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப் பணி" (New Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித்(வ.செ.பொ.I)துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை

மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963-இல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதித்(வ.செ.பொ.I) துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு சிறுபான்மையினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2023-24 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித்(வ.செ.பொ-1/ பி,மிபி(ம)சிந) துறைக்கு அனுப்பி வைக்குமாறு சிறுபான்மையினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை, நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற எண்.1776820/நிதி (பி,மிபி(ம)சிந)/2023, நாள் 24.11.2023-இல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1361 (ஆயிரத்து முன்னூற்று அறுபத்து ஒன்று). (IFHRMS ASL No.2023111361).

(ஆளுநரின் ஆணைப்படி)

ரீட்டா ஹரீஷ் தக்கர்
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர்,
சிறுபான்மையினர் நலன், சென்னை-05.
உறுப்பினர்-செயலர்,
தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம், சென்னை-05.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்ட மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்,
மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர்கள்,
சென்னை, வேலூர், விழுப்புரம், திருநெல்வேலி
மற்றும் கோயம்புத்தூர்.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.
மாநில கணக்காயர், சென்னை-18.

நகல்:
நிதி(பி, மிபி(ம)சிந/வ.செ.பொ-I, II) துறை, சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலன்) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசு செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்